புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஆகஸ்டு 19, 2021 | புரட்சி 20 | முழக்கம் 25 | விலை: ரூ.3.00

## தி.மு.க. ஆட்சி கடந்து வந்த 100 நாள்

# தமிழ்நாட்டுக்கான தனிக் கல்விக் கொள்கை உருவாகிறது

*தமிழ்நாட்டுக்கு தனிக் கல்விக் கொள்கை உருவாக்கப்படும் என்று தமிழக அரசு நிதி நிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறது. ஒன்றிய ஆட்சியின் புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஏற்காது என்பதே இது கூறும் செய்தி. பட்ஜெட் குறித்து கழக சார்பில் கழகப் பொதுச்செயலாளரும், 100 நாள் சாதனைக் குறித்து கழகத் தலைவரும் பதிவிட்ட கருத்துகள்.*

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்ட கருத்து:**

ஒரு கட்சி தேர்தல் அறிக்கை அளிக்கிறது என்றால், அது தனது ஆட்சி காலத்தில் இன்ன இன்ன சாதனைகளை நிறைவேற்றுவோம் என்ற திட்டங்களை அறிவிப்பது தான் தேர்தல் அறிவிப்பு. ஆனால் 100 நாட்கள் முடிவதற்கு முன்பே ஆயிரம் கேள்விகள் எழுகிறது, எதிர்க்கட்சிகளிடமிருந்து. ஆனால் அதையும் மீறி நூறாவது நாளில் ஆயிரம் சாதனைகளை செய்து முடித்திருக்கிறார்கள். ‘பெண்களுக்கு அரசு பேருந்தில் இலவச பயணம் யாரும் எண்ணிப் பார்த்திருக்க முடியாத ஒன்று. அதை நிறைவேற்றினார்கள். பெட்ரோல் விலையை குறைப்போம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள், அதை விட்டருக்கு 3 ரூபாய் குறைத்துள்ளார்கள். பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் என்று கலைஞர் கூறினாரே, ‘அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர்’ என்ற திட்டத்தின்படி பணி நியமனம் ஆணைகளை வழங்கியிருக்கிறார்கள்.

ஆட்சியேற்ற நூறு நாட்களில் மிகச் சிறந்த சாதனைகளை பகட்டாய் சொல்லிக் கொள்ளாமல், அமைதியாய் செய்து முடித்துக் கொண்டிருக்கிற அரசாக திமுக அரசு உள்ளது. முதல்வர் ஸ்டாலின் ஒரு முறை கூறினார், ‘எங்களுக்கு வாக்களித்தோர் மகிழ்கிற வகையிலும், வாக்களிக்காதோர், அய்யோ இவர்களுக்கு வாக்களிக்கவில்லையே என்று ஏங்குகிற வகையிலும் இருக்கும்’ என்றார். அந்தச் சொல்லை நூறு நாட்களுக்குள் நிறைவேற்றியிருக்கிறார் என்ற மகிழ்ச்சி தான் இந்த 100 நாட்களில் எங்களுக்கு உள்ளது.

**கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட்ட கருத்து:**

தமிழக நிதி அமைச்சர் 13.08.2021 அன்று தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கை அனைத்து தரப்பினராலும் வரவேற்கப்படுகின்றது. எதிர்க்கட்சிகள், தேர்தல் வாக்குறுதிகளில் கொடுக்கப்பட்ட அனைத்தையும் ஏன் நிறைவேற்றவில்லை என்று கேட்கிறார்களே தவிர நிதி நிலை அறிக்கை குறித்து ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள் ஏதும் இல்லை. கடும் கொரோனா நெருக்கடியிலே ஆட்சிக்கு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம். கடன் சுமையோ மிக மிக அதிகம். திமுக பல வாக்குறுதிகளை மக்களிடம் கொடுத்திருந்தது. இந்த நிலையில் இந்த அறிக்கையை தயாரிக்க வேண்டிய நெருக்கடிக்கு தமிழக அரசு தள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் இந்த நிதி நிலை அறிக்கை தமிழக அரசின் எதிர்கால பொருளாதார கொள்கையின் அணுகுமுறை எப்படி இருக்கும் என்பதை திட்டவட்டமாக சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது.

ஒரு அரசு கடன் வாங்குவதில் தவறில்லை, ஆனால் அந்தக் கடன் மூலதனத்திற்கு செலவிடப்பட வேண்டியதாக இருக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு சம்பளம் தருவதற்கும், ஏற்கெனவே வாங்கிய கடனுக்கு வட்டி கட்டுவதற்கும் இருந்தால் அது மிக மிக மோசமான நிர்வாகம். அத்தகைய ஒரு நிர்வாகத்தை எதிர்காலத்தில் நாம் நிச்சயம் நடத்தக் கூடாது என்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி உறுதியாக இருக்கிறது என்பதை இந்த நிதி நிலை அறிக்கை உணர்த்தி இருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய நிதித்துறை செயலாளர், ‘எந்தக் கண்ணோட்டத்திலே நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார். இந்த ஆறு மாத காலத்தில் இதன் பயனை அல்லது இதன் வெற்றியை காணா விட்டாலும், இனி அடுத்தடுத்து வாங்குகின்ற கடனை, மாநிலத்தினுடைய மூலதனத்திற்கு மட்டுமே பயன்படுத்துவோம் என்ற கொள்கையில் திசை மாறாமல் இந்த அரசு நடைபோடும்’ என்று அவர் தெளிவாக கூறியிருக்கிறார்.

தேர்தலுக்கு முன்பு, தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின், மக்களை சந்தித்து, மக்களின் குறை கேட்டு மனுக்களைப் பெறுகின்ற ஒரு திட்டத்தைத் தொடங்கினார். 100 நாட்களுக்குள் இந்த மனுக்கள் மீதான பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படும் என்று அவர் உறுதியளித்திருந்தார். எதிர்க்கட்சிகள் அதை கேலி செய்தனர். அவர் மனுக்களை வாங்கிப் போடும் பெட்டிகள், இறுதி வரை திறக்கப் போவதேயில்லை, மு.க. ஸ்டாலின் நாடகமாடுகிறார் என்றெல்லாம் கேலி பேசினர். ஆட்சிக்கு வந்தவுடன், முதல்வர் இதற்கான தனித் துறையைத் தொடங்கி 100 நாட்களுக்குள் இப்போது அந்தப் பிரச்சனைகளை தீர்த்து வைத்திருக்கிறார். இதற்கான அறிவிப்பு அரசின் சார்பில் இப்போது வெளிவந்திருக்கிறது. 4.75 இலட்சம் மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன. இதில் முழுமையாக 2.29 இலட்சம் மனுக்களின் கோரிக்கைகள் தீர்த்து வைக்கப்பட்டு, மக்களிடம், பயன்பெற்றவர்களிடம், நேரடியாக தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும், உங்கள் பிரச்சனை இதன் மூலம் தீர்ந்திருக்கிறதா என்றும் கேட்டும் அறிந்திருக்கிறது. தீர்க்கவே முடியாத பல பிரச்சனைகள் மனுக்களாக வந்தபோது, அதுகுறித்து அவர்கள் மேல் முறையீடு செய்வதற்கான வாய்ப்பையும் ஆட்சி வழங்கி யிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள், தனி நபர்கள் பட்டாக்களை பெற்றிருக்கிறார்கள், நிதி உதவிகளை பெற்றிருக்கிறார்கள் என்று அரசி னுடைய அறிவிப்புகள் கூறுகின்றன. 100 நாட்களில் சொன்னதை சொன்னவாறு செய்து முடித்திருக்கிறது, தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி.

நிதி நிலை அறிக்கையில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் கூட இதில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட ‘தேசிய கல்விக் கொள்கை’ யை முற்றிலுமாக நிராகரித்து தமிழ்நாட்டிற்கான கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசே உருவாக்கும் அது தமிழ்நாட்டினுடைய தனித்துவத்தின் அடிப்படையிலே இருக்கும். ‘இதற்காக கல்வி நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைப்போம்’ என்ற அறிவிப்பு தான் இதில் மிகவும் பிரதானமானது. இதற்காக சுமார் 32000 கோடி ரூபாய் பள்ளிக் கல்வித் துறைக்கு தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கியிருக் கிறது என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

‘திராவிடன் மாடல்’ என்பதனுடைய அடையாளம் விளிம்பு நிலை மக்களை அதிகாரப் படுத்துவது தான். விளிம்புநிலை மக்களை எப்படி அதிகாரப்படுத்துவது? அவர்களுக்கான கல்வி உரிமை, அவர்களுக்கான மருத்துவ கட்டமைப்பு வசதிகள், அவர்களுக்கான வாழ்விட உரிமைகள், அவர்களுக்கான வாழ்வுரிமை திட்டங்களுக்கு அரசு முன்னுரிமை கொடுத்து செயல்படுதல் ஆகியவற்றின் வழியாக அவர்கள் அதிகாரப்படுத்தப்படுகிறார்கள். அதிகாரப்படுத்தப்பட்ட விளிம்புநிலை மக்கள் சுயமரியாதையை இயல்பாகவே பெற்று விடுகிறார்கள். எனவே சுயமரியாதை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தான் திராவிட இயக்கம் தன்னுடைய கொள்கைகளை, திட்டங்களை வகுத்து முன்னேறுகிறது என்பதை இந்த 100 நாள் ஆட்சி நாட்டுக்கு உணர்த்தி நிற்கிறது. கடந்து வந்த சாதனைகளை திரும்பிப் பார்க்கக்கூடிய ஒரு பெருமையை இன்றைக்கு தமிழர்களுக்கு, திமுக தலைவர் மு.க ஸ்டாலின் முதலமைச்சராக இருந்து உருவாக்கி நிகழ்த்தி காட்டி இருக்கிறார். இந்தத் திட்டங்களுக்கு நாம் மக்களுடைய ஆதரவைப் பெறுவோம். புழுங்கிக் கிடக்கின்ற, பூணூல்வாதிகள், மனுவாதிகளினுடைய அழுகுரல்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த குரல்கள் கேட்டுக் கொண்டே இருக்கட்டும். திராவிடன் மாடல் சமூகநீதி பயணம் தொடரட்டும்.

## பெரியார் நெஞ்சில் தைத்த முள் நீங்கியது



*மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் அருகே உள்ள கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் மகத்தான சமூக புரட்சி ஒன்று அமைதியாக அரங்கேறியிருக்கிறது. இந்தப் புரட்சியை தமிழ்நாடு அரசு செய்து முடித்திருக்கிறது. “பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்ற விரும்பிய கலைஞரின் ஆணையை இன்று நான் நிறைவேற்றினேன். பயிற்சி பெற்ற 24 அர்ச்சகர்களுக்குப் பணி நியமனத்திற்கான ஆணைகளை பிறப்பித்தேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது டிவிட்டர் பக்கத்தில் பெருமிதத்துடன் பதிவு செய்திருக்கிறார்.*

*ஆம், அர்ச்சகர் பயிற்சி முடித்து 13 ஆண்டுகாலத்திற்கு மேலாகப் பணிக்காகக் காத்திருந்த அனைத்து ஜாதியினரையும் சேர்ந்தவர்களுக்கு இன்றைக்கு முதல் கட்டமாக 24 பேருக்கான பணி நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. குன்றக்குடி அடிகளாரும், பேரூர் ஆதீனமும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருப்பது இந்த நிகழ்ச்சிக்கு மிகப் பெரிய சிறப்பாகும்.*

*பெரியார் தொடங்கிய அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற போராட்டத்திற்கு தோளோடு தோள் நின்று ஆதரவு கொடுத்தவர் மறைந்த மூத்த ‘குன்றக்குடி அடிகளார்’ ஆவார். அவருடைய வாரிசு இன்றைக்கு அந்தப் பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார். அவர் இந்த நிகழ்ச்சியிலே பங்கேற்று இருக்கிறார். பெரியார் திராவிடர் கழகம் சேலத்தில் தமிழ் வழிபாட்டு உரிமை மாநாட்டை நடத்தியபோது அதில் பங்கேற்று உரையாற்றியவர் பேரூர் ஆதீனம். அவரும் இந்த நிகழ்ச்சியிலே பங்கேற்று பெருமை சேர்த்து இருக்கிறார். நியமிக்கப்பட்ட 24 அர்ச்சகர்களில், பட்டியலினப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 5 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள் 6 பேர், பிற்படுத்தப்பட்டோர் பிரிவைச் சேர்ந்தவர்கள் 12 பேர், பார்ப்பனரல்லாத உயர்ஜாதி சமூகத்தைச் சார்ந்தவர் ஒருவர், இதில் ஓதுவார்களாக நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*திருவரங்கம் ரெங்கநாதசாமி, மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவில், வயலூர் முருகன் உள்ளிட்ட பெரிய கோவில்களிலும் இவர்கள் உப அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது இதில் குறிப்பிடத்தக்க தனிச் சிறப்பாகும்.*

*அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக்குவோம் என்று, திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தலில் அளித்த வாக்குறுதியை, 100 நாட்களில் செய்து முடிப்போம் என்று பதவியேற்றவுடன் அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு அறிவித்தார். அதேபோல் 100 ஆவது நாளில் தமிழ்நாடு முதலமைச்சர் பேராதரவுடன் இந்த மகத்தான புரட்சி நிறைவேறியிருக்கிறது. சமூக சமத்துவ வரலாற்றில் இது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நாள். பெரியாருடைய சமூக புரட்சித் தத்துவம் வெற்றிப் பாதையை நோக்கி முன்னேறுவதற்கு தன்னுடைய முதல் அடியை எடுத்து வைத்திருக்கிற நாள். (உள்ளே தலையங்கம்)*

**தலையங்கம்**

## அர்ச்சகர் நியமனத்தில் வீண் புரளிகள்

கோயில்கள் பக்தர்களுக்குரிய வழிபாட்டுத் தலம் என்பது உண்மை என்றால், அதில் வழிபடும் உரிமையும் வழிபாடுகளை நடத்தும் உரிமையும் அதே மதத்தைச் சார்ந்த அனைத்துப் பிரிவு மக்களுக்கும் இருக்க வேண்டும் என்பதே நியாயம். முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு, அரசு நடத்திய அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் முறையாக, ஆகமம் வழிபாட்டு முறைகளைப் பயின்றவர் களில் 24 பேருக்கு தமிழ்நாட்டுக் கோயில்களில் உப-அர்ச்சகர் - ஓதுவார் உள்ளிட்ட கோயில் பணியாளர்களாக நியமித்துள்ளது. ஒட்டு மொத்தமாக இப்போது நியமிக்கப் பட்டுள்ள 58 அர்ச்சகர்களில் உரிய பயிற்சி பெற்று, 13 ஆண்டுகாலம் காத்திருந்த 24 பேருக்கு மட்டுமே பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது. ஏனைய 29 பேர் ஏற்கனவே பாரம்பர்யமாக அர்ச்சகர்களாக அதாவது அரசு பள்ளியில் உரிய பயிற்சிப் பெறாதவர்களுக்குத் தான் பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

முறையான பயிற்சிப் பள்ளிகளில் படிக்காமல், தங்களுக்குத் தாங்களே வேத மந்திரங்களைப் படித்து, எந்தத் தேர்வுக்கும் உட்படாதவர்களை மட்டுமே அர்ச்சகர்களாக்க வேண்டும் என்பதுதான், இப்போது ‘பிராமண புரோகிதர்கள்’ - பார்ப்பனியர்கள் முன்வைக்கும் வாதம். அனைத்துத் துறைகளிலும் ‘தகுதி-திறமை’ பேசுகிறவர்கள், ‘நீட்’ போன்ற நுழைவுத் தேர்வுகள் வழியாக வடிகட்டி திறமையானவர்களை மருத்துவப் படிப்புக்கு அனுமதிக்க வேண்டும் என்று வாதிடுவோர், ‘அர்ச்சகர்’ பதவிக்கு மட்டும் ‘குரு’விடம் பயில்வோர்தான் தகுதியானவர், முறையாக பள்ளியில் பயிற்சி பெற்று வருகிறவர்கள் தகுதியற்றவர்கள் என்று பேசுவது இவர்களின் இரட்டை வேடத்தையே காட்டுகிறது.

மற்றொரு உண்மைக்கு மாறான செய்தியையும் பரப்பி வருகிறார்கள். பயிற்சி பெற்ற அர்ச்சகர்களை நியமித்து, அன்றாட ஊதியத்தில் நியமிக்கப்பட்ட ‘பாரம்பர்ய’ பார்ப்பன புரோகிதர்களை பணி நீக்கம் செய்துள்ளார்கள் என்று பேசி வருகிறார்கள். சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த ‘சிவாச்சாரியார்கள் சங்கம்’ சார்பில் வாதாடிய வழக்கறிஞர் இதே கருத்தை நீதிமன்றத்தில் கூறியிருக்கிறார். இது உண்மையல்ல; அப்படி ஒருவர்கூட பதவி நீக்கம் செய்யப்படவில்லை என்று நீதிமன்றத்திலேயே அரசு தலைமை வழக்கறிஞர் மறுத்துள்ளார். தமிழக சட்டமன்றத்திலும் தமிழக முதல்வரும் அறநிலையத் துறை அமைச்சரும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர். தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பழைய அர்ச்சகர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு அவர்கள் தொடர்ந்து பணியாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அறநிலையத் துறையும் தெளிவுபடுத்தியிருக்கிறது.

வீண்புரளியைக் கிளப்புவது அவர்களுக்கு வாடிக்கையானதுதான். காந்தியார், சிதம்பரம் வருகை தந்தபோது நடராசர் கோயிலுக்குள் ‘தீண்டப்படாத’ மக்களை’ அழைத்து வரப் போகிறார் என்று புரளி கிளப்பி, கோயி லுக்கே பூட்டு போட்டார்கள் தீட்சதர்கள் என்பது வரலாறு.

தற்போது தமிழ்நாட்டுக் கோயில்கள் ஆகமவிதி முறையைப் பின்பற்றி முறையாக வழிபாடுகள் நடக்கின்றனவா என்ற கேள்விக்கு ‘இல்லை’ என்று எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது நியமிக்கப்பட்ட நீதிபதி மகராஜன் குழு பல்வேறு சான்றுகளுடன் சுட்டிக்காட்டியது. (அதை விரிவாக வேறு ஒரு இடத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறோம்)

1960ஆம் ஆண்டு ஒன்றிய ஆட்சியே இந்தியா முழுமைக்கும் உள்ள கோயில்களைப் பற்றி ஆராய, இந்து சமய அறக்கட்டளைக் குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழுவின் தலைவர் வைதீகத்தில் ஊறிப்போன சி.பி.ராமசாமி அய்யர். அந்த அறிக்கையில் கோயில் வழிபாட்டுச் சடங்குகள் முறையாக நடக்க வேண்டுமானால் அது குறித்துப் பயிற்சி பெற்றவர்களாக ஆகமங்களை முறையாகப் படித்தவர்களாக இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தியதோடு, பயிற்சிக்குப் பயன்படுத்த வேண்டிய ஆகம நூல்களையும் பிற பிரதிகளையும் பட்டியலிட் டுள்ளது. பரம்பரை பரம்பரையாக அர்ச்சகர்களாக இருப்பவர்கள் தங்களை பயிற்சிக்குள்ளாக்கி தகுதிக் குள்ளானவர்களாக நிரூபிக்க வேண்டும் என்ற கருத்தை அழுத்தமாக வலியுறுத்தியது. பெரும்பாலான கோயில்களில் பரம்பரை அர்ச்சகர்கள் நடத்தும் வழிபாட்டு முறைகள் திருப்தி அளிக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டியது. இதற்குப் பிறகாவது, ‘பரம்பரை அர்ச்சகர் உரிமை’ களை ஆகம சாஸ்திரப் பயிற்சிப் பள்ளிகளில் படித்து தங்கள் தகுதியை உறுதிப்படுத்திக் கொள்ள வைதீகப் பார்ப்பனர்கள் முன்வரவில்லை. மாறாக, இப்போது முறைப்படி பயிற்சி பெற்று வரும் அர்ச்சகர் நியமனங்களை எதிர்க்கிறார்கள்.

பார்ப்பன ஆதிக்கத்தில் கை வைக்காமல் எந்த மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ள தயாராகவே இருக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். ஆகமங்களுக்கு எதிராக கோயில்களின் மின் விளக்கு, சி.சி.டி.வி. கேமராக்கள், ஆன்லைன் பிரசாதங்கள் என்று எத்தனை மாற்றங்கள் வந்து விட்டன. தமிழக அரசு இதில் மிகவும் நிதானமாகவே செயல்பட்டு வரும் நிலையில், ‘கோயில் பிரச்சினைகளில் கோளாறுகளை’ இந்த ஆட்சி உருவாக்கி வருகிறது என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

இவ்வளவுக்குப் பிறகும் நீதிமன்றங்கள் வழியாக தங்கள் ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமா என்று கருதாமல், மக்கள் மன்றம் இப்போது விழித்துக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 19.08.2021

# ஆகமத்துக்குள் பதுங்குவோரே, இதற்கு என்ன பதில்?

***ஆகம விதிகளை மீறக் கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்குப் போடும் சிவாச்சாரியார்களே, இப்போது ஆகமவிதிகள் முறையாகத்தான் நடக்கிறதா?***

ஆங்கில புத்தாண்டு பிறப்பின்போது நள்ளிரவில் பல பெரிய கோயில்கள் பூஜைக்கு திறந்துவிடப்படுகிறது. இதைக் கண்டித்து பா.ஜ.க. பொதுச் செயலாளராக இருந்த இல.கணேசன், ‘தினமணி’ நாளேட்டில் (4.1.2001) இவ்வாறு கடிதம் எழுதினார்.


“ஹிந்து ஆகமப்படி ஆலயங்களில் சுவாமியை இரவு பள்ளி கொள்ள அனுப்பி விட்டால் மறுநாள் காலை பள்ளி எழுச்சிதான். எந்த ஜாதியினரையும் அர்ச்சகராக்கிக் கர்ப்ப கிரகத்துக்கு உள்ளே அனுமதிக்கலாம் என்ற கோரிக்கை வரும்போது பாதுகாப்புக்கு ஆகம விதிக்குள் புகுந்து கொள்பவர்கள், இந்த விஷயத்தில் ஆகம விதியை மீறத் துணிவது எப்படி எனப் புரியவில்லை?” - இது இல.கணேசன் எழுப்பிய கேள்வி.

- அர்ச்சகர்களாக இருப்பவர்களுக்கான உடல் தகுதி மற்றும் இருக்கக்கூடாத குறைபாடுகள் குறித்தும் ஆகமம் கூறுகிறது. அதிகமாக உடல் பருத்து குண்டாக இருப்பவர்களும், அதிக குள்ளமாக இருப்பவர்களும், மொட்டைத் தலை, செம்பட்டை மயிர், உடலில் அதிக உரோமம் இருப்பது, ஊனமுற்றோர், பல் இல்லாதவர், அதிகம் உண்ணுபவர் போன்றவர்கள், அர்ச்சகர் களாவதற்கு தகுதி இல்லாதவர்கள் என்று காரணாகமம், பூர்வ பாகம் 26ஆவது படலம் ஆச்சாரிய இலட்சணம் விதிப்படலம் ஆகிய ஆகம சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. இந்த அளவுகோலின்படி தான் அர்ச்சகர்கள் இருக்கிறார்களா? அப்படி இல்லாதவர்களை கண்டறிந்து அர்ச்சகர் பொறுப்பிலிருந்து நீக்கிட ஏதேனும் கண்காணிப்பு அமைப்பு இருக்கிறதா?
- சிவன் கோயில்களில் அர்ச்சகர்களாக இருக்கும் பார்ப்பனர்களில் இரு பிரிவினர் உண்டு. ஒன்று - சிவாச்சாரி அல்லது ஆதி சைவர் என்று அழைக்கப்படும் பார்ப்பனர்கள். இவர்கள் ‘சிவபெருமான்’ அய்ந்து முகங்களிலிருந்து சிவனாலேயே உருவாக்கப்பட்டவர்களாம். மற்றொரு பிரிவினர் ‘ஸ்மார்த்த பார்ப்பனர்’. இவர்கள் ‘பிரம்மா’வின் நான்கு முகங்களிலிருந்து ‘பிரம்மாவால்’ உருவாக்கப் பட்டவர்களாம்.

  சிவன் கோயில்களில் பூஜை செய்ய சிவாச்சாரியார்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. “ஸ்மார்த்த பிராமணர்களுக்கு” உரிமை கிடையாது என்றும், அப்படி ஆகம விதிகளை மீறி செயல்பட்டால் அரசனுக்கும் நாட்டுக்கும் உடனே கேடு வந்துவிடும் என்றும் ஆகமங்கள் திட்டவட்டமாக கூறுகின்றன. (காடிகாகமம், காரணாகமம் ஆகிய ஆகமங்கள்) இந்த ஆகமவிதிகள் பின் பற்றப்படுகிறதா? சிதம்பரம், இராமேசுவரம், திருவிழி மிழலை, கன்யாகுமரி, திருவானைக் காவல், திருச்செந்தூர் போன்ற பிரபலமான சிவன் கோயில்களில் சிவாச்சாரியார் அல்லாத “ஸ்மார்த்த பிராமணர்களே” காலம்காலமாக பூஜை நடத்துகிறார்கள். இது ஆகம விதிமீறல் இல்லையா?
- கருவறைக்குள் சிவாச்சாரியார் அல்லாத பிரிவினர் நுழைந்தால், சிலையைத் தொட்டால், சிலையின் புனிதம் கெடும் என்று ஆகமம் கூறுகிறது. ஆனால் பல சிவன் கோயில்களில் ‘ஸ்மார்த்த பிராமணர்களே’ அபிஷேக தீர்த்தம் தருதல்; பரிவட்டம் துவைத்தல்; திருவிளக்கு இடுதல் போன்ற வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். பார்ப்பனர்கள் மட்டும் ஆகமங்களை மீறிக் கொள்ளலாமா?
- அர்ச்சகர்கள் ஊதியம் பெறக் கூடாது; அதனால் ‘தேவலோகத் துவேஷம்’ வரும். கோயிலின் புனிதம் கெடும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. (ஆதாரம்: காரணாகமம், பூர்வபாகம், புண்ணியாபிஷேக விதிப்படலம்) ஆனால், என்ன நடக் கிறது? அர்ச்சகர் மாத ஊதியம் வாங்குகிறார்கள்; சங்கம் அமைத்துக் கொண்டு ஓய்வூதியம் கேட்கிறார்கள்; கோயில் வருமானத்தில் ஒரு பங்கு தங்களுக்கு ஊக்க ஊதியமாக தரவேண்டும் என்கிறார்கள். இது ஆகமத்துக்கு எதிரானது அல்லவா?
- மனைவி இல்லாதவன் (அபத்திகன்), பிரம்மச்சாரி ஆகியோர் ‘நைமித்திகம்’ போன்ற பூஜைகள் செய்யக் கூடாது என்கிறது ஆகமம். ஆனால், பல கோயில் களில் இவர்கள் நைமித்திக பூஜை செய் கிறார்கள். இவர்களை பரிசோதிக்க ஏதேனும் அமைப்பு இருக்கிறதா? மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?
- கோயில்களில் கடவுளை ‘பிரதிஷ்டை’ செய்வது ஆகமப்படி நடந்திருக்கும். அதே கோயிலில் ஆகம பூஜையே நடத்த வேண்டும். அதற்கு பதிலாக ‘ஸ்மார்த்த பிராமணர்கள்’ வைதீக பூஜை நடத்துகிறார்கள். நடராசர் - தெட்சிணாமூர்த்தி போன்ற பெரும் கடவுள்களுக்கு தனித்தனி மந்திரங்கள் இருந்தும்கூட - அர்ச்சகர் ஒரே மந்திரத்தைக் கூறுகிறார். தேவி மந்திரத்தை காளிக்கும், மாரியம்மனுக்கும் வித்தியாசமின்றி கூறு கிறார்கள் - இவை ஆகமத்துக்கு எதிரானவை அல்லவா?
- பெருங்கோயில்களிலுள்ள மடப்பள்ளியில் (படையல் உணவு தயாரிக்கும் இடம்) சிவாச்சாரியார்களே நிவேதனம் (படையல் உணவு) தயாரிக்க வேண்டும் என்பது ஆகமவிதி. பல பெரிய கோயில்களில் ‘தீட்சைகூட இல்லாத “ஸ்மார்த்த பிராமணர்கள்” உணவு தயாரித்து படையல் செய்வது வழக்கமாக இருக்கிறது. இது ஆகம விரோதம் இல்லையா?
- பழனி முருகன் கோயிலில் பார்ப்பனரல்லாத பண்டாரங்கள்தான் காலம் காலமாக பூஜை நடத்தி வந்தார்கள். திருமலை நாய்க்கன் காலத்தில் அவனது பார்ப்பன தளபதி இந்த பண்டாரங்களை துரத்தி அடித்துவிட்டு பார்ப்பனர்களை உள்ளே கொண்டு வந்தான். திருவேற்காடு கருமாரியம்மன் கோயிலில் பார்ப்பனர்கள் பூஜை செய்கிறார்கள்; இவை ஆகமங்கள் மீறல் இல்லையா?
- ஆகமங்களின்படி ‘சிவன்-விஷ்ணு’வை இணைத்து கோயில் கட்ட முடியாது. சென்னையில் ‘சிவ-விஷ்ணு’ கோயில் கட்டப்பட்டு, அதில் பார்ப்பனர்கள் பூஜைகளும் நடத்துகிறார்களே! இதை எந்த ஆகமம் அனுமதிக்கிறது?
- ஆகமக் கோயில்களில் மின்சாரம், கண்காணிப்புக் கேமிரா, ‘தரிசனத்துக்கு ஆன்லைன் பதிவு’ என்றெல்லாம் விஞ்ஞான கருவிகள் பயன்படுத்தப்படுகிறதே; இவற்றையெல்லாம் ‘ஆகமம்’ அனுமதிக்கிறதா?
- வேத பூஜை என்பதும், ஆகம பூஜை என்பதும் வெவ்வேறானது. அக்னி, வாயு, வருணன், இந்திரன் - இவை எல்லாம் வேதக் கடவுள்கள். இந்தக் கடவுளுக்கான படையல் (நிவேதனம்) நெருப்பின் வழியாகவே நடத்தப்படும். நெருப்பான ‘அக்னி’ தேவன், படையல் பொருள்களை அந்தந்தக் கடவுள்களுக்குக் கொண்டு செல்லும் ‘கூரியர்’ ஆக செயல்படுகிறானாம் - சிவன் - திருமால் என்ற கடவுள்களுக்கு மட்டுமே உரித்தானது ஆகமம்.
- இந்தக் கடவுள்களுக்கு நேரடியாகவே படையல் செய்ய வேண்டும். பார்ப்பனர்கள் கோயில்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்ட பிறகு, ஆகமத்தையும் வேதத்தையும் ஒன்றாக்கிக் கொண்டார்கள். அதன்படி வேத பூஜைகள் நடத்துகிறார்கள். இவை ஆகம விதிமீறல்கள் இல்லையா?

(தொடரும்)

### சொத்து சேர்ப்பது பெருமை அல்ல!



ஒருவன் எவ்வளவுதான் சொத்துச் சேர்த்து வைத்துவிட்டுப் போனாலும் அது அவனுக்கு பெருமை அளிக்காது; அதற்காக அவனுக்கு யாரும் மரியாதை செய்யவும் மாட்டார்கள். அச் சொத்து, மறைவின்போது அவனுடன் செல்வது இல்லை.

ஒவ்வொருவரும் எந்த வகையில் இருந்தாலும், தங்கள் நேரத்தின் ஒரு பகுதியை, உழைப்பின் ஒரு பகுதியை, ஊதியத்தின் ஒரு பகுதியை, பொதுத் தொண்டிற்காக, ஏனைய மக்களுக்காகச் செலவிட வேண்டும். அதுதான் தனக்கென்று செய்து கொள்வதாகும் ; மறைந்த பிறகும் தன் பெயர் நிலைத்து நிற்கச் செய்வதாகும்.

**விடுதலை 07.02.1950**

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (5)

# பிரிட்டிஷார் கொண்டு வந்த சீர்திருத்தச் சட்டங்கள்

*கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.*

**விடுதலை இராசேந்திரன்**

பிரிட்டிஷ் ஆட்சியில் பார்ப்பனர்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்று, பெரிய பதவிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டினார்கள். பிரிட்டிஷ் ஆட்சி, பார்ப்பனர்கள் எதிர்ப்பில் மிகவும் தயக்கம் காட்டியது. மதப் பிரச்சினைகளில் பிரிட்டிஷ் ஆட்சி தலையிடக் கூடாது என்ற உறுதிமொழியை பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து பார்ப்பனர்கள் பெற்றுக் கொண்டார்கள். 'விக்டோரியா பிரகடனத்தில்' அவ்வுறுதிமொழி சேர்க்கப்பட்டது.

அப்போதெல்லாம் நீதிமன்றங்களில் 'இந்துக்களுக்கான' வழக்குகளுக்கு அடிப்படை சட்டமாக 'மனு சாஸ்திரம்' உள்ளிட்ட சமஸ்கிருத சாஸ்திர நூல்களே இருந்தன. அய்ரோப்பிய நீதிபதிகள் 'புரோகிதர்களை' அருகில் வைத்துக் கொண்டு, அவர்கள் தரும் ஆலோசனைப்படி தீர்ப்புகளை வழங்கினார்கள். மனுசாஸ்திரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் வில்லியம் ஜோன்ஸ் என்ற பிரிட்டிஷ்காரர். அவரே 'புரோகிதர்கள் கூறும் சாஸ்திர விளக்கங்கள் குழப்பமாக இருக்கிறது; அவர்கள் நேர்மை யானவர்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் கூறும் விளக்கங்களை நம்ப முடியவில்லை' என்று கூறினார். புரோகிதர்கள் கூற்றுக்கும் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளதற்கும் வேறுபாடுகள் இருப்பதை உணர்ந்த அய்ரோப்பிய நீதிபதிகள், புரோகிதர்களை உடன் வைத்துக் கொள்ளும் முறையை 1864 முதல் நிறுத்தி விட்டார்கள். இதை புரோகிதர் கூட்டம் விரும்பவில்லை.

மற்றொன்று 'உயில்' எழுதுவது தொடர்பான பிரச்சினை; தனது இறுதி காலத்தில் செத்துக்களை யாருக்கு வழங்குவது என்பது குறித்தும், இறுதி விருப்பம் குறித்தும் எழுத்துபூர்வமாகப் பதிவு செய்வதே 'உயில்', வேத சாஸ்திரங்களில் 'உயில்' எழுதுவது பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. எனவே இந்த உயில்களை சட்டப்படி ஏற்க முடியாது என்று புரோகித பார்ப்பனர்கள் வலியுறுத்தினார்கள். 1860இல் நீதிமன்றம் உயில் எழுதுவது சட்டப்படி செல்லும் என்று தீர்ப்பளித்தது.

புரோகிதர்களை ஆத்திரப்படுத்திய மற்றொரு முக்கிய பிரச்சினை, பிரிட்டிஷ் ஆட்சி கொண்டு வந்த 'இந்திய சம்மத வயது வந்தோர் சட்டம் - 1875'. மனைவிக்கு 12 வயது ஆன பிறகு தான் கணவன், அவளோடு உடலுறவு கொள்ள வேண்டும் என்று கூறியது இந்தச் சட்டம். அதற்கு முன்பு 10 வயதிலேயே உறவு கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. சிறு வயதிலேயே பெண்களை திருமணம் செய்து வைக்கும் 'பால்ய விவாகம்' என்ற சமூகக் கொடுமையை பெண்கள் மீது சுமத்தியிருந்தது வேத புரோகிதப் பார்ப்பனர்கள் கூட்டம். சிறுமிகளை பாலுறவு வன்கொடுமை யிலிருந்து விடுவிக்கும் இந்தச் சட்டத்தை மிகக் கடுமையாக எதிர்த்தவர் பேஷ்வா பார்ப்பனரும், காங்கிரஸ் தலைவருமான பால கங்காதர திலகர். இந்தச் சட்டத்தை எதிர்த்து 1890இல் மக்களைத் திரட்டி பெரும் பொதுக் கூட்டங்களை நடத்தினார் திலகர். எந்தச் சீர்திருத்தமாக இருந்தாலும் மதத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்றும், இந்த சீர்திருத்தச் சட்டங்களின் மீது நம்பிக்கை இல்லாதவர்களை சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தக் கூடாது என்றும் அவர் வாதிட்டார். நாடு முழுதும் பார்ப்பனப் புரோகிதர்கள் இந்தச் சட்டத்துக்கு எதிராகக் கூட்டங்களை நடத்தினார்கள். திலகர் தனது 'கேசரி' பத்திரிகையில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி எதிர்ப்பைத் தூண்டி விட்டார்.

சம்மத வயது சட்டத்தை ஆதரித்து 1891ஆம் ஆண்டு பிப். 25 அன்று புனே நகரில் 'கிரீதா பவன்' என்ற அரங்கில் சீர்திருத்தவாதிகள் நடத்திய ஒரு கூட்டத்தில் திலகர் தனது ஆதரவாளர்களுடன் உள்ளே நுழைந்து, நாற்காலி மேஜைகளை உடைத்து, கலவரம் செய்து கூட்டத்தை பாதியில் நிறுத்தினார் என்று திலகரின் வாழ்க்கை வரலாற்றைப் புகழ்ந்து பெருமையுடன் எழுதியுள்ள டக்டர் விஸ்வநாத் பிரசாத் வர்மா, அந்த நூலில் பதிவு செய்துள்ளார். ஆனால் பார்ப்பன புரோகிதர் பண்டிதர்களின் கடும் எதிர்ப்புகளையும் மீறி 1891இல் மத்திய சட்டசபையில் பிரிட்டிஷ் ஆட்சி சட்டமாக்கியது. அப்போது வைஸ்ராயாக இருந்தவர் லேன்ஸ் டவுன். சட்டம் தான் வந்ததே தவிர, சமூகத்தில் 'பால்ய விவாகங்களை' தடுக்க முடியவில்லை.

பார்ப்பனியத்தின் சமூகச் செல்வாக்கு சமூகத்தை இறுக்கப் பிடித்திருந்ததோடு, பிரிட்டிஷ் ஆட்சியையும் அச்சுறுத்தியே வந்தது. பிறகு சுமார் 35 வருடங்கள் கழித்து, பெண்ணின் திருமண வயதை 14ஆக உயர்த்தும் மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால் சட்டமாக்க முடிவில்லை. இந்தியாவில் பெரும்பாலான பெண்களுக்கு 15 வயதுக்கு முன்பே திருமணங்கள் முடிந்து விடுகின்றன என்ற அதிர்ச்சியான தகவல்களை பிரிட்டிஷ் ஆட்சி நியமித்த குழு வெளிப்படுத்தியது. அதைத் தொடர்ந்து, 1929இல் ஹர்பிலாஸ் சாரதா என்பவர் பெண்ணின் திருமண வயதை 14 என்றும் ஆணின் வயதை 18 ஆகவும் நிர்ணயித்து, ஒரு மசோதா கொண்டு வந்தார். அது சட்டமானது இந்தச் சட்டத்தை மீறுவோருக்கு 1000 ரூபாய் அபராதம், ஒரு மாத சிறைத் தண்டனை என்று அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டம் இந்து, கிறித்தவர் மற்றும் முஸ்லிம் அனைவருக்கும் பொருந்துவதாக இருந்தது.

கணவன் இறந்தவுடன் அவனது உடலை எரிக்கும் நெருப்பிலேயே மனைவியையும் எரிக்கும் 'உடன்கட்டை' ஏறுதல் என்ற சமூகக் கொடுமையை பார்ப்பனர்கள் சமூகத்தில் திணித்தார்கள். இதற்காக வேதங்களின் வார்த்தைகளையே திருத்தியதை வரலாற்றாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். 'பால்ய விவாகம்', 'உடன்கட்டை ஏறுதல்' எனும் இரண்டு சமூகக் கொடுமைகளுமே வர்ணங்களை மீறி, திருமணங்கள் நடந்து விடக் கூடாது; 'பிராமணர்' உள்ளிட்ட இரு பிறப்பாளர்கள் 'உயர் வர்ணப் பெருமை' கட்டிக் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு திணிக்கப்பட்ட சமூகக் கொடுமையாகும்.

- *தென்னாட்டில் 'தீண்டப்படாத மக்கள்' ஊதியம் பெறாமல் 'அடிமைகளாக' நடத்தப் பட்டதை பிரிட்டிஷ் ஆட்சி தடை செய்தது.*
- *'பால்ய விவாகம்' தடைச் சட்டம் வந்தபோது திலகர் கடுமையாக எதிர்த்தார். சீர்திருத்தச் சட்டத்தை ஆதரித்தவர்கள் தாக்கப்பட்டனர்.*
- *தஞ்சை நாயக்கர் மன்னன் இறந்தபோது அவருடன் 375 பெண்கள் நெருப்பில் போட்டு சாகடிக்கப்பட்டனர்.*
- *'உயில்' எழுதுவதை புரோகிதர்கள் ஏற்க மறுத்தனர்.*

'சதி' எனும் 'உடன்கட்டை' ஏறும் கொடுமை, வடநாட்டில் அதிக அளவில் நடந்தாலும் தென்னாட்டிலும் இருந்திருக்கிறது. 1802இல் தஞ்சையை ஆண்ட நாயக்கர் மன்னர் இறந்தபோது அவருடன் 375 பெண்கள் தாங்களாகவே உயிரைப் பலி கொடுத்தனர். 1829இல் வில்லியம் பெண்டிங் என்பவர் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது 'சதி'க் கொடுமையை ஒழித்து சட்டம் இயற்றினார். இராஜாராம் மோகன்ராய் போன்ற சீர்திருத்தவாதிகள் இதற்கு ஆதரவாக இருந்தனர்.

அதேபோல், பெண் குழந்தைகள் பிறந்தாலே கொன்று விடும் 'பெண் சிசுக் கொலை', 1870இல் பிரிட்டிஷ் ஆட்சியில் தான் தடை செய்யப்பட்டது. இந்தச் சட்டத்தின் வழியாகத்தான் பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்வது கட்டாயப்படுத்தப்பட்டது.

பெண்கள் மீது சுமத்தப்பட்ட மற்றொரு சமூகக் கொடுமை, கணவனை இழந்த பெண்கள், 'விதவை'களாகவே வாழ்ந்து, சாக வேண்டும் என்பதாகும். இது, சாஸ்திரத்தில் ஏற்கப்பட்டிருக்கிறது என்று பார்ப்பன பழமைவாதிகள் வாதிட்டனர். குறிப்பாக, 'பிராமண' சமூகத்தில்தான் இந்த 'விதவை'க் கொடுமைகள் தீவிரமாகப் பின்பற்றப்பட்டன. 1855இல் கவர்னர் ஜெனரல் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்த கிராண்ட் என்பவர், இந்தக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தில், 'விதவைகள் மறுமணம்' எனும் மசோதாவைக் கொண்டு வந்தார். புரோகிதர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். பிரிட்டிஷான கிறிஸ்தவர்கள், 'இந்து' நம்பிக்கைகளில் தலையிடுவதாகக் குற்றம் சாட்டினார்கள். நாடு முழுதும் இந்தச் சட்டத்துக்கு பழமைவாதிகள் எதிர்ப்பும், சீர்திருத்தவாதிகள் ஆதரவும் எழுந்த நிலையில், 1856இல் இந்து விதவைகள் மறுமணம் சட்டமாக்கப்பட்டது. சட்டம் வந்ததே தவிர, சமூகத்தில் நடைமுறைக்கு வர முடியவில்லை. சட்டம் வந்து 33 ஆண்டுகளுக்குப் பிறகு, 1889இல் ஜி. சுப்ரமணிய அய்யர் தன்னுடைய விதவை மகள் சிவப்பிரியாம்பாள் என்பவருக்கு மறு மணம் செய்து வைத்தார். இதன் காரணமாக ஜாதி சமூகத்திலிருந்து அவர் ஒதுக்கி வைக்கப்பட்டார். சட்டம் வந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு தான் சென்னை மாகாணத்தில் 1851, டிசம்பர் 11இல் முதல் விதவைத் திருமணம் நடந்தது. (ஆதாரம்: ப.சு. சந்திரபாபு-இல. திலகவதி எழுதிய 'பெண் வரலாறும் விடுதலக்கான போராட்டமும்' ஆய்வு நூல், பாரதி புத்தகாலய வெளியீடு)

அடிமை முறை எனும் கொடுமை தமிழ்நாட்டிலேயே இருந்திருக்கிறது. அடிமைகளாக நடத்தப்பட்டவர்கள் அனைவருமே 'சூத்திரர்கள்'. 'தீண்டப்படாத' பிரிவைச் சார்ந்த மக்கள், ஊதியம் வாங்காமல் அவர்கள் வேலை செய்வது கட்டாயம். 'சூத்திரர்கள்', அடிமைகளாக நடத்தப்பட்டார்கள் என்றால், 'தீண்டப்படாத', 'சண்டாளர்கள்' என்று அழைக்கப்பட்ட மக்கள், இறந்துபோன சடலங்களுக்கு இணையாக நடத்தப்பட்டனர். முதலில் பிரிட்டிஷ் ஆட்சி இதை கண்டு கொள்ளவில்லை. 'கொடுமை தாங்காமல் ஓடிப்போன அடிமைகளை'க் கண்டு பிடித்து, மீண்டும் அவர்களின் எஜமானர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வருவாய் வாரியத்துக்கு தஞ்சை 'கலெக்டர்' (ஆட்சித் தலைவர்) கடிதம் எழுதிய ஆவணங்கள் இருக்கின்றன. அடிமைகள் தங்களின் 'எஜமானர்களிடம்' அடிமைகளாக வேலை செய்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டிய பொறுப்பு, காவல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1830இல் திருச்சி 'கலெக்டர்' என்.எஸ். கேமரோன், தனது மாவட்டத்தைச் சார்ந்த ஒரு 'பிராமண' நிலப் பிரபுவிடமிருந்து ஓடிப் போன பத்து 'பள்ளர்' சமூகத்தைச் சார்ந்தவர்களை திருப்பி அனுப்புமாறு சேலம் கலெக்டருக்கு கடிதம் எழுதியிருப்பதை வரலாற்றுப் பேராசிரியர் சி. பரமார்த்தலிங்கம் பதிவு செய்திருக்கிறார்.

1843ஆம் ஆண்டில் அடிமை ஒழிப்புச் சட்டம் வந்தது. 1861இல் தண்டனை வழங்கக்கூடிய 'பீனல் கோடு' சட்டம் வந்தது. ஆனாலும் சட்டங்களால் அடிமைமுறையை ஒழித்துவிட முடியவில்லை. 1871ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை இவ்வாறு கூறுகிறது.

**"ஒரு சமூகம் என்ற அடிப்படையில் (தீண்டப்படாத) மக்களை பிரிட்டிஷ் நிர்வாகம் விடுதலை செய்திருந்தாலும் சமூக அடுக்கு எனும் அமைப்பில் அவர்கள் படுபாதாளத்திலேயே இருந்தார்கள். பொதுப் பயணிகள் படகுகளில் ஒரு 'பறையர்' தனது முகத்தைக் காட்டிவிட முடியாது. அரசு மற்றும் பொதுப் பள்ளிகளில், அரசு நிதி உதவியோடு நடத்தப்படும் பள்ளிகளிலும் இதே நிலை தான்"** என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை எழுத்துபூர்வமாகப் பதிவு செய்துள்ளது.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் 'இந்தியா' வந்த பிரஞ்சுக்காரர் அபேதுபே 30 ஆண்டுகள் தென்னகத்தில் தங்கி மக்களின் பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, 'இந்திய மக்கள்' என்ற நூலை பிரெஞ்சு மொழியில் எழுதி (1806) வெளியிட்டார். பிறகு தமிழிலும் வெளி வந்தது. அதில், ஏராள மான ஜாதிக் கொடுமைகள், பெண்களைக் கட்டாயப் படுத்தி உயிருடன் எரிக்கப்பட்ட அவலங்களைப் பதிவு செய்துள்ளார். மக்களிடையே இந்தக் கொடுமைகள் குறித்து விழிப்புணர்வை உருவாக்கி யதில் அய்ரோப்பாவிலிருந்து இந்தியா வுக்கு வந்த கிறிஸ்தவ போதகர்களின் பங்கு மகத் தானது. அவர்களின் நோக்கம் மதம் மாறச் செய்வது தான் என்றாலும் சமூகக் கொடுமைகளுக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கினார்கள். பிரிட்டிஷார் கொண்டு வந்த சட்டங்களால் 'சமூக மாற்றங்கள்', 'விழிப்புணர்வுகள்' வந்து விடுமோ என்று பார்ப்பனர்கள் அஞ்சினார்கள்.

பிரிட்டிஷாருடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள போட்டி போட்டுக் கொண்டு நின்ற பார்ப்பனர்கள், சமூக மாற்றச் சட்டங்களைக் கண்டு பதறினார்கள். முதலில் திலகர் தொடங்கிய 'இந்து' சுயராஜ்யத்தை ஆதரித்தார்கள். பிறகு காங்கிரசிலும் நுழைந்து தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்தினர். மாறுபட்ட காந்தியை சுட்டுக்கொலை செய்தனர்.

(தொடரும்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 19.08.2021

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மடத்துக்குளம் மோகன் படத்திறப்பு – நினைவேந்தல்

தோழர் மடத்துக்குளம் மோகன் (தலைமைக்குழு உறுப்பினர், திவிக) படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு 14.08.2021 சனிக்கிழமை மாலை 3 மணி அளவில் மடத்துக்குளம், ஸ்ரீ ரங்கநாயகி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

திவிக கோவை மாவட்டச் செயலாளர் வே.வெள்ளிங்கிரி தலைமை தாங்கினார். சிவானந்தம், இராஜேந்திரன், கணக்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மடத்துக்குளம் மோகனின் இணையர் மோ.ஜோதி தொடக்க உரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மடத்துக்குளம் மோகன் படத்தைத் திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார்.

திமுக கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவையின் மாநிலச் செயலாளர் பொள்ளாச்சி மா. உமாபதி, மடத்துக்குளம் மோகன் குறித்தான நினைவுகளை மிகவும் உருக்கமாக பதிவு செய்தார்.

முன்னதாக நினைவேந்தல் நிகழ்வு பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை ஆகியோரின் கொள்கை பாடல்களுடன் துவங்கியது.

முதலில் மாணவர் கழகத் தோழர்கள் தேன்மொழி, விஷ்ணு, சபரிகிரி, சந்தோஷ் ஆகியோர் தங்கள் நினைவுகளை பகிர்ந்தனர்.

பிறகு தோழர் மோகனுடன் பணிபுரிந்தவர்கள், இயக்கத் தோழர்கள், குடும்ப நண்பர்கள் ஆகியோர் தங்கள் நினைவுகளைப் பதிவு செய்தனர்.

நினைவேந்தல் உரை ஆற்றியோர் : கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழக வெளியீட்டு செயலாளர் கோபி இளங்கோவன், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன், கழக தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம், அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, மாவட்டக் கழகத் தலைவர் முகில் ராசு, கோவை மாநகர செயலாளர் நிர்மல் குமார், பாண்டியநாதன் உள்ளிட்ட கழகத் தோழர்கள்.




கழக ஆதரவாளர் பத்திரிக்கையாளர் ராஜாமணி, முரளி (திமுக), விடுதலை மணி (விசிக), பன்னீர்செல்வம் (சிபிஅய்), எம் மூர்த்தி (சிபிஅய்), சென்னிமலை ராமசாமி (த.பெ.தி.க.), பிரபாகரன் (தமிழ்நாடு திராவிடர் கழகம்), பாரதி (தமிழ் தேசிய விடுதலை இயக்கம்), பெரியார் தாசன் (ஆதித்தமிழர் பேரவை), தங்கவேல் (திராவிட தமிழர் கட்சி), கலா முருகேசன் (வழக்கறிஞர்), சாதிக் பாட்சா, கருணாநிதி (மடத்துக்குளம் அரசு அனைத்து துறை சங்கம்(, மதன்குமார் (அரசு ஊழியர் சங்கம்), சாந்தகுமார் (தோழர் அறக்கட்டளை), நடராஜன் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

நிறைவாக மடத்துக்குளம் மோகன் மகள் மோ.ஜோ. அறிவுமதி நன்றி கூறினார்.

கோவை திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலை கழக நிர்வாகிகள், தோழர்கள், மடத்துக்குளம் மோகன் நண்பர்கள், உறவினர்கள் என பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை திருப்பூர், கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# தாலிபான்களின் மத அடிப்படை வாதம்

இது மக்களாட்சி யுகம். மதங்கள் தோன்றி எத்தனையோ ஆண்டுகள் ஓடி விட்டன. இப்போது மதச்சட்டங்களை தூக்கி வைத்துக்கொண்டு அந்தச் சட்டங் களின்படிதான் ஆட்சி நடத்துவோம் என்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கு பெயர் ‘Fundamentalism’ அது இந்து அடிப்படை வாதமாக இருந்தாலும் சரி, இஸ்லாமிய அடிப்படை வாதமாக இருந்தாலும் சரி எந்த அடிப்படை வாதமாக இருந்தாலும் அது மக்களுக்கு எதிரானது.

ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் ஆயுதப் போராட்டம் நடத்தி துப்பாக்கி முனையில் ஆட்சியை கைப்பற்றி இருக்கிறார்கள். அங்கே இருந்த அதிபர் உயிருக்கு பயந்து வேறு நாட்டிற்கு தப்பி ஓடிவிட்டார். ஆப்கான் நாட்டில் வாழும் மக்களே அச்சத்தின் பிடியில் சிக்கி இருக்கிறார்கள். அந்த நாட்டில் இருந்து எப்படியாவது தப்பித்துவிட்டால் போதும் என்ற மனநிலையில் இருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. 2001 ஆம் ஆண்டுக்கு முன்பு தாலிபான்கள் ஆட்சியில் இருந்த போது ‘Islamic Emirate of Afghanistan’ என்ற பெயரில் அவர்கள் தங்களது ஆட்சியை நடத்தினார்கள். அப்போது ஆட்சியை எதிர்ப்பவர்களை சுட்டுக் கொன்றார்கள். பெண்கள் வேலைக்கு செல்வதை தடுத்தார்கள். பெண்கள் படிக்கவே கூடாது என்று தடை போட்டார்கள். பெண்கள் எந்தெந்த ஆடைகளை உடுத்த வேண்டும் என்பது மதத்தின் பெயரால் கட்டாயமாக திணிப்பட்டன. ஆண் துணை இல்லாமல் பெண் வெளியே நடமாட முடியாது என்ற நிலை இருந்தது. பெண்களை இப்படி ஒரு பக்கம் அடக்கி ஆள்வது. கேட்டால் மதங்கள் அப்படித்தான் கூறுகிறது என்று சொல்வது. மக்களின் ஜனநாயக கருத்துரிமையை மதத்தை காரணம் காட்டி தடுப்பது. கேட்டால் சுட்டுக்கொல்வது என்பதெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடியவை இல்லை.

ஆனால், இன்றைக்கு சர்வதேச அரசியல் என்பது உள்நாட்டு மக்கள் எவ்வளவு கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதைவிட தங்களுக்கான மேலாதிக்கத்தை தொடங்குவதற்கு என்ன வழிகள் இருக்கின்றன என்பதைத்தான் தேடிக் கொண்டிருக்கின்றன. தலிபான்களின் ஆட்சி ஆப்கானில் வந்தவுடன், சீனா ஆதரவு கரத்தை நீட்டிவிட்டது. பாகிஸ்தானும் அதை ஆதரித்துவிட்டது. இரஷ்யா மட்டும் பொறுத்திருந்து முடிவெடுக்கப் போவதாக கூறியிருக்கிறது. அமெரிக்காவில், அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிற ஆப்கானிய மக்கள் ஏன் அமெரிக்க படைகளை திரும்பப் பெற்று விட்டீர்கள்? என்று போராடுகிறார்கள்.

மதம் ஆட்சி செய்கின்ற எந்த நாடாக இருந்தாலும் அது மக்களை காட்டுமிராண்டி காலத்திற்கே பின்னோக்கி இழுத்துச் செல்லும் என்பதில் இரண்டு வித கருத்துகளுக்கு இடமே இல்லை. மத அடிப்படை வாதம் இப்படி எந்த உருவில் வந்தாலும், சமத்துவத்தை விரும்புகிற சமூகம், அறிவியல் சமூகம், மக்களாட்சி கோட்பாடுகளை ஏற்கும் சமூகம் அதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

# அன்னூர் சம்பவம் நடந்தது என்ன?

கோவை மாவட்டம், அன்னூர் ஒட்டர் பாளையம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த முத்துசாமி என்பவர் உதவியாளரராகப் பணியாற்றிவந்தார். இந்தநிலையில், அதே பகுதியைச் சேர்ந்த கோபால்சாமி என்ற விவசாயி, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்துக்குச் சென்றபோது இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

மேலும், கோபால்சாமியின் காலில் விழுந்து முத்துசாமி மன்னிப்பு கேட்கும் வீடியோ வெளியானது. பட்டியல் இனத்தைச் சேர்ந்த முத்து சாமியை, மாற்று சமூகத்தைச் சேர்ந்த கோபால்சாமி சாதியைச் சொல்லித் திட்டியதால் இந்தச் சம்பவம் நடந்ததாக முதலில் தகவல் வெளியானது.

இதைத் தொடர்ந்து, விவசாயி கோபால்சாமி மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட இரண்டு வழக்குகளில் அன்னூர் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இந்த நிலையில், கிராம உதவியாளர் முத்துசாமி தான் அலுவலகத்தில் வைத்து கோபால்சாமியைத் தகாத வார்த்தையில் பேசியும் அடித்தும் இருக்கிறார். இதற்கான வீடியோ காட்சிகள் வெளி வந்தன.

உடனே ஆட்சியர் சமீரன் உத்தரவின்படி, மாவட்ட வருவாய் அலுவலர் லீலா அலெக்ஸ் விசாரணை நடத்தி, நடந்தது என்ன என்பதைக் கண்டறிந்தார். தவறு செய்தவர் கோபால்சாமி அல்ல; கிராம உதவியாளர் முத்துசாமியும், வி.ஏ.ஓ. கலைச் செல்வியும் தான்.

முதலில் கோபால்சாமியை தாக்கியது முத்துசாமி தான் என்பது விசாரணையில் தெரிய வந்தது. அடித்த முதத்துசாமியே வீடியோ பதிவுகள் நடப்பதை அறிந்து, தானாகப் போய் காலில் விழுவதுபோல் ஒரு காட்சியை உருவாக்கினார் என்று விசாரணையில் கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து முத்துசாமி, கலைச் செல்வி இருவரையும் பணியிடை நீக்கம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வாரம் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இது குறித்து ஏற்கனவே வந்த செய்தியை வெளியிட்டிருந்தது. அந்த செய்தி உண்மையல்ல என்று இப்போது விசாரணையில் தெரிய வந்துள்ளது. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதும், அதற்கேற்ப வீடியோ காட்சிகளை தயாரிப் பதும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும் ஜாதிவெறி சக்திகளை ஊக்கப்படுத்துவதாகி விடும் என்று ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் நியாயம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற கவலையுடன் சுட்டிக் காட்டுகிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 19th August 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN